10.07.2026

அ.வ.எண். 90/2022

வா.சா.2 சுதாகரன் குறுக்கு விசாரணை

1. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1971ம் வருடம் பிறந்தேன். கிருஷ்ணவேணியம்மாள் ராமதாஸ் ரெட்டியாருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கிருஷ்ணவேணியம்மாளுக்கு தாவாசொத்து எப்படி பாத்தியம் என்றால் ஆவணத்தை பார்த்தேன், என்ன ஆவணம் என்றால் கூர்சீட்டு மூலம் கிடைத்தது. மேற்சொன்ன கூர்சீட்டு யார் யாருக்குள் ஏற்பட்டது என்றால் அப்போது நான் பிறக்கவில்லை, எனக்கு தெரியாது. கடைசியாக கூர்சீட்டை எப்போது பார்த்தேன் என்றால் சுமார் 20 வருடத்திற்கு முன்பு பார்த்தேன். அந்த கூர்சீட்டை யார் எனக்கு காண்பித்தார்கள் என்றால் எனது பெரியப்பா ராமதாஸ் காட்டினார்.

2. கிருஷ்ணதாஸ்க்கு ராமதாஸ் என்ன உறவு என்றால் அவரது தகப்பனார் ஆவார். மேற்சொன்ன கூர்சீட்டை தற்போது வாதியிடமிருந்து கேட்டு வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. மேற்சொன்ன கூர்சீட்டு பற்றி வாதியிடம் அது எங்குள்ளது, யாரிடம் உள்ளது என்ற விவரங்களை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். தற்போது கூர்சீட்டு யாரிடம் உள்ளது என்றால் வாதியிடம் உள்ளது. எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் யார் சொல்லி தயார் செய்யபட்டது என்றால் நான்தான் சொன்னேன். கூர்சீட்டு யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்றால் மனோரஞ்சித்தமாள்,

கிருஷ்ணவேணியம்மாள் மற்றும் வேதவள்ளியம்மாள் ஆகியோர்களுக்குள் ஏற்பட்ட கூர்சீட்டு ஆகும்.

3. மேற்சொன்ன கூர்சீட்டு நீதிமன்றத்தில் சமர்பித்தால்தான் அதன் உண்மை நிலவரம் தெரியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நித்யா 2ம் பிரதிவாதி ரேவதியிடமிருந்து தாவாசொத்தை கிரையம் பெற்றுவிட்டார் என்றால் ஏமாற்றி வாங்கிவிட்டார்கள். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கும் சமயத்தில் 2ம் பிரதிவாதி ரேவதி பெயரில்தான் பட்டா இருந்தது என்றால் எனக்கு தெரியாது. எந்த காலத்திலும் தாவாசொத்திற்கு கிருஷ்ணதாஸ், அவரது தகப்பனார் ராமதாஸ் ரெட்டியார் மற்றும் ராமதாஸ் ரெட்டியாரின் அம்மா பெயரில் எப்போதுமே பட்டா இருந்ததில்லை என்றால் சரிதான், ஆனால் பத்திரம் இருந்தது.

4. ஆதியில் தாவாசொத்திற்கு வேதவள்ளியம்மாள் பெயரில்தான் பட்டா இருந்தது என்றால் சரிதான், 36 செண்ட் நிலத்திற்கு அவர்கள் பெயரில்தான் பட்டா இருந்தது. வேதவள்ளியம்மாள் எப்போது இறந்தார் என்றால் நான் சிறுவயதாக இருந்தபோது இறந்துவிட்டார், வருடம் ஞாபகமில்லை. வேதவள்ளியம்மாளுக்கு 2ம் பிரதிவாதி ரேவதி என்ன உறவு என்றால் பேத்தி ஆவார்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)